DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 49/2019** |
| Deposition of Witness for | : PW 4 |
| Name | : திரு. மாரியப்பன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 07.07.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 7th **July** 2026.

**A1 எதிரி ஆஜர். A2 ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது தமிழ்நாடு காவல் துறையில் சிறப்பு உதவி ஆய்வாராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். இதற்கு முன்பு சின்னகோவிலான்குளம் காவல்நிலையத்தல் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது, கடந்த 06.07.2016 ம் தேதி 12.15 மணிக்கு சின்னகோவிலான்குளம் காவல்நிலையத்தில் நிலையப்பொறுப்பில் இருந்தபோது வேப்பன்குளம் மெயின்ரோடு, மாடசாமி(எ) செல்வம் காவல்நிலையம் ஆஜராகி கொடுத்த

எழுத்துப்பூர்வமான புகார் மனுவை பெற்று காவல்நிலையக்குற்ற எண்.110/2016 ச/பி.341, 294(பி), 323, 506(ii) IPC ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். பின்னர் அதன் அசல் மற்றும் புகார் மனுவை சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். அதன் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், அதன் ஒரு நகலை விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் அன்பழகன் அவர்களின் பார்வைக்கும் வைத்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் அன்பழகன், என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் சொன்ன நாள், நேரத்தில், அ.சா.1–டம் புகார் மனு பெற்று முதல் தகவல் அறிக்கையை பதில் செய்வதாக சொல்வது உண்மை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரினை பெற்று அரசு தரப்பிற்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்னின் அசல் அச்சு முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்தில் 5 நாள் காலதாமாக 11.07.2016–ம் தேதி அன்று அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். 5 நாள் காலதாமதமாக நீதிமன்றததிற்கு அனுப்பட்டதற்கான காலதாமதத்திற்கான காரணம் எதுவும் துலங்காது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை**

(Sd/-)M.Mari
Judicial Magistrate,
Sankarankovil.